දුරකථන /தொலைபேசி இல./Telephone Nos.

අමාත්‍යතුමා / அமைச்சர் / Minister } 2784832 Fax: 2784825

ලේකම් / செயலாளர் / Secretary } 2784812

කාර්යාලය / அலுவலகம் / Office } 2785141-50 Fax: 2784846

ඊමේල්/ஈ-மெயில்/E-mail : isurupaya@moe.gov.lk

ඔබේ අංකය / உமது இல. / Your No. } ........................

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

"ඉසුරුපාය"
බත්තරමුල්ල.
'இசுருபாயா'
பத்தரமுல்ல.
"Isurupaya"
Battaramulla.

මගේ අංකය / எமது இல. / My No. } ED/1/9/1/1/2

දිනය / திகதி / Date } 2012.05.08

சுற்றுநிருப இல: 2012 /13

சகல மாகாணக்கல்விச் செயலாளர்கள்,
மாகாணக்கல்விப் பணிப்பாளர்கள்,
வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
கோட்டப் பிரதி உதவிக் கல்விப் பணிப்பாளர்கள்,
பாடசாலை அதிபர்கள்

### ஆரம்பக் கல்விப் பாடத்திட்டம் முறையாக நடைமுறைப்படுத்தப்படல்

01.ஆரம்பக் கல்வி மறுசீரமைப்புக்கு அமையத் தேசிய கல்வி நிறுவகத்தால் முதலாந்தரம் தொடக்கம் ஐந்தாந்தரம் வரைக்கும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பாடத்திட்டம் எதிர்பார்க்கப்படுகின்ற மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படாத சந்தர்ப்பங்கள் காணப்படுவதாகத் தெரிய வந்துள்ளது. அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இப்பாடத்திட்டம் எதிர்பார்க்கப்படும் மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படுவது அத்தியவசியம் என்பதைக் கவனத்திற் கொள்ளுவதற்காக இச்சுற்றுநிருபம் வெளியிடப்படுகிறது.

02.முதலாந் தரத்திலிருந்து ஐந்தாந் தரம் வரைக்கும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பாடத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவது அத்தியாவசியமாயிருந்தும், அவ்வாறு செய்யாது 5ம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையை இலக்காகக் கொண்டு வெளிவாரியாகப் பல்வேறு புத்தகங்கள், சஞ்சிகைகள், மற்றும் வெளிவாரி நிறுவனங்களில் பெற்றுக்கொள்ளப்படும் வினாத்தாள்கள் போன்றன பாடசாலை வேளையில் பயன்படுத்துவதற்கு மாணவர்கள் ஈடுபடுத்தப்படுவதாக அறியப்படுகிறது.

03. இலங்கைப் பரீட்சைத்திணைக்களத்தால் 1995.04.28ம்திகதி வெளியிடப்பட்ட இல7/ 95 சுற்றுநிருபம் மூலம் ஐந்தாம் தரத்தில் புலமைப் பரிசில் பரீட்சையில் முதலாவது வினாப்பத்திரத்தில் மாணவரில் காணப்படும் கற்றல் திறன்கள் மற்றும் 14 நியதிகளை அளவிடுவதையும், 2வது வினாத்தாளில் 1ம் தரத்திலிருந்து 5ம் தரம் வரைக்கும் வகுப்பறையிற் கற்பிக்கப்படும் பாட உள்ளடக்கத்தைச் சார்ந்ததாக மாணவர்கள் பெற்றுக்கொள்ளும் அறிவு, திறன்,மனப்பாங்குகளை அளவிடுவதையும் நோக்காகக் கொண்டுள்ளது என்பது குறிக்கப்பட்டுள்ளது. இதன்படி ஆரம்பக் கல்விப் பிரிவுக்கான பாடத்திட்டம் முறையாக நடைமுறைப்படுத்தப்படுவதன் மூலம் இப் பரீட்சையை எதிர்கொள்வதற்கு அவசியமான தேர்ச்சிகள் மாணவர் மத்தியில் விருத்திசெய்யப்படல் வேண்டும்.

04. இவ்வாறு கூறப்பட்டிருந்தும் அனேக பாடசாலைகளில் 5ம் தர்ப் புலமைப்பரிசில் பரீட்சையை முதன்மைப்படுத்தி வெவ்வேறு நபர்கள் மற்றும் வெவ்வேறு நிறுவனங்களுடன் இணைந்து செயலமர்வுகள் மற்றும் கருத்தரங்குகள் என்பன பாடசாலை வேளையில் நடாத்துதல், இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி மாணவருக்கும் பெற்றோருக்கும் பல்வேறு புத்தகங்கள், இறுவட்டுக்களை விற்பனை செய்தல், ஒருசில ஆசிரியர்கள் நிதி அறவிடுதல், மேலதிக வகுப்புக்கள் நடத்துதல் மற்றும் அவ் வகுப்புக்களுக்குச் சமுகம் தராத மாணவர்களை வற்புறுத்துதல் போன்ற சந்தர்ப்பங்களும் அறியப்பட்டுள்ளன. இவை மாணவர்களுக்கு நெருக்கடியாகவும் பெற்றோருக்கு மேலதிகச் செலவாகவும் காணப்படுகிறது. இத்தகைய நடவடிக்கைகள் பாடசாலைகளில் இடம்பெறக் கூடாது என்பதையும் கவனத்திற்குத் தருகிறேன்.

05. ஆரம்பக் கல்விப் பிரிவு மூன்று முதன்மை நிலைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒரு முதன்மை நிலைக்கு ஒரு ஆசிரியர் நியமிக்கப்பட வேண்டும். ஒரு முதன்மை நிலை முடிவில் அடுத்த முதன்மை நிலைக்கு வேறு ஒரு ஆசிரியரை நியமித்தல் வேண்டும்.

06. ஆரம்பக் கல்விப் பிரிவில் ஒவ்வொருதரத்திற்கும் ஒவ்வொரு நிலையிலும் மாணவர் அடையவேண்டிய தேர்ச்சி மட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இத் தேர்ச்சி மட்டங்களை மாணவர்கள் அடைந்துகொள்ளச் செய்வது உரிய நிலைக்குப் பொறுப்பான ஆசிரியர்களின் வகைகூறலாகும். எனவே ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் காட்டப்பட்டுள்ளதன்படி கணிப்பீடு செய்யும்முறை செயற்படுத்தப்படவேண்டும். சில பாடசாலைகளில் வெவ்வேறு காரணங்களை அடிப்படையாகக் கொண்டு சமாந்தர வகுப்புக்களிடையே மாணவர்களை மாற்றி விடுவது குறித்தும் தெரியவந்துள்ளது. இவ்வாறான மாற்றங்களைச் செய்ய முடியாது என்பதனையும் கவனத்திற் கொள்ளவும்.

07. முதலாந் தரம் தொடக்கம் ஐந்தாந்தரம் வரை தேசிய கல்வி நிறுவகத்தால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பாடத்திட்டம் ஆசிரியர் அறிவுரைப்புக்கள் முறையாக நடைமுறைப்படுத்தப்படுவதுடன் பாடத்திட்டத்திற்கு அமைவாகத் தரப்பட்டுள்ள பாடப் புத்தகங்களைப் பாவிப்பதற்கும் மாணவர்களை ஈடுபடுத்தும் வகையில் கற்றல் கற்பித்தற் செயன்முறைகளை ஒழுங்கமைத்துச் செயற்படுத்துவது குறித்தும் அதிபர்கள் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும்.

H.M . குணசேகர
செயலாளர்
கல்வி அமைச்சு

பிரதிகள்.1.பணிப்பாளர் நாயகம்-தேசிய கல்வி நிறுவகம்
2.பரீட்சை ஆணையாளர் நாயகம்--பரீட்சைத்திணைக்களம்
3.சகல மாகாண ஆரம்பக் கல்வி இணைப்பாளர்கள் (உ.க.ப /பி.க.ப)
4.சகல வலய ஆரம்பக் கல்வி இணைப்பாளர்கள்( உ.க.ப / பி.க.ப)